**வாக்குமூலம்**
**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்.**
**O.S.No.401/2022**
**வழக்கு சாட்சி P.W.3**
**1873ம் ஆண்டின் 10வது விதியின்படி திரு.கே.சிலம்பரசன் அவர்களால் திறந்த நீதிமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : அன்சாரி | தொழில் | : துணை வட்டாட்சியர் |
| தகப்பனார் பெயர் | : ஜான்பாட்ஷா | கணவர் பெயர் | : ---- |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | வயது | : சுமார் 41 |
| தாலுக்கா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 14.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

<u>முதல் விசாரணை :</u>

இவ்வழக்கில் வட்டாட்சியர் அலுவலகத்தில் உள்ள தேவத்தூர் கிராமம், சர்வே எண்.116/3 சம்மந்தமாக 27.12.1983 தேதியில் தேவத்தூர் வருவாய் அலுவலர் வழியாக வாதி தங்கராஜ் என்பவருக்கு கொடுத்த Eviction அறிவிப்பு சம்மந்தமாக அசல் ஆவணத்தை சமர்ப்பிக்க வேண்டி வருவாய் வட்டாட்சியருக்கு அழைப்பாணை சார்வு செய்யப்பட்டது. அழைப்பாணையின் தன்மை படி வருவாய் வட்டாட்சியர் வர இயலாத நிலையில் மேற்படி வழக்கில் எனக்கு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க அதிகார பகிர்வு கடிதம் கொடுத்துள்ளார். **<u>கடந்த 13.10.2025ம் தேதியிட்ட வட்டாட்சியரின் அதிகார பகிர்வு கடிதம் சா.சா.ஆ.1.</u>** அழைப்பாணையில் கண்டுள்ள ஆவணங்களை எடுத்து வந்துள்ளேனா என்றால் ? இல்லை. ஏன் எடுத்து வரவில்லை என்றால் ? 27.12.1983 தேதியிட்ட ஆவணமானது எங்களது தாலுக்கா அலுவலகத்தில் இல்லை. ஒட்டன்சத்திரம் தாலுக்கா அலுவலகம் கடந்த 1996ம் ஆண்டு தான் ஏற்படுத்தப்பட்டது. அதனால் மேற்படிஆவணங்கள் எங்களது அலுவலகத்தில் இல்லை. பழனி வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்படி ஆவணம் இருக்க வாய்ப்பு உள்ளது.

(தொடர்ச்சியான முதல் விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.)

C
JAYAPPRAKASH

Digitally signed
by C
JAYAPPRAKASH
Date: 2025.10.14
18:09:20 +0530

சார்பு நீதிபதி

ஒட்டன்சத்திரம்